# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளை (கூட்டிணைத்தல்)*

***சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்***

---

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன அவர்களால் 2022, மே மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *116 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *24.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளை (கூட்டிணைத்தல்)

## சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

**முன்னுரை**

"சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அறக்கட்டளையொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்க சொல்லப்பட்ட அறக்கட்டளையுடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட அறக்கட்டளை எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயர்**

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக் கட்டளையை கூட்டிணைத்தல்**

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''அறக்கட்டளை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளையின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப் பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோ ரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டிணைக்கப் பட்ட குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளை'' என்னும் பெயர்

மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப் பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்திற்காகவும் கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங் கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதலும் வேண் டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

3. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படு வதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டு மென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்வுக்கான வசதிகளை வழங்குதல்;

(ஆ) சிறுநீரக மற்றும் நீரிழிவு நோயாளர்களுக்கான வைத்திய சாலைகளை நிறுவுதல் பராமரித்தல்;

(இ) விசேடமாக குறை வருமானமுள்ள மற்றும் குறைந்த வசதியுள்ள குடும்பங்களின் சிறுநீரக மற்றும் நீரிழிவு நோயாளர்களை அடையாளங்காணல், விழிப்புணர்வை ஏற்படுத்தல் சிகிச்சையளித்தல்;

(ஈ) சிறுநீரக மற்றும் நீரிழிவு உட்பட ஏனைய தொற்றா நோய் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுவதற்காக போதனை கள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளல்;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் அல்லது ஏனைய நிறுவனங்களுடனும் நல்லுற வினைக் கட்டியெழுப்புதல்; மற்றும்

(ஊ) சிறுநீரக வைத்தியசாலையோடு இணைந்த முதியோர் இல்லமொன்றினை ஆரம்பித்து அதனை கொண்டு நடாத்துதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் குறிக்கோள்களின் அமுலாக்கலில், கூட்டுத்தாபனம், அத்தகைய அமுலாக்கலானது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை, பிறப்பிடம் அல்லது ஏதேனும் அத்தகைய ஏதுக்கள் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டுமென உறுதிப்படுத்தல் வேண்டும்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனைக் கூட்டிணைக்கப்பட்ட குழு உறுதிப் படுத்துதல்*

**4**. கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு*

**5**. (1) இச்சட்டம் துவங்கம் முதல் நாளன்றும் கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்பட்டதன் பின்னரும் முறையாக இணைத்துக் கொள்ளப்படும் அனைத்து உறுப்பினர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட இடாப்பொன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவால் பேணப்படுதல் வேண்டும்.

(2) அவ்விடாப்பு,

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வோர் உறுப்பினரதும் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டடையின் இலக்கம்;

(ஆ) உறுப்பினரின் பெயர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட திகதி; மற்றும்

(இ) எவரேனும் உறுப்பினரின் உறுப்பாண்மை முடிவடைந்த திகதி,

ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பாண்மை இல்லாதொழில்*

**6**. உறுப்பினரொருவரின் உறுப்பாண்மை பின்வருமான முறையில் இல்லாதொழிதல் வேண்டும்-

(அ) இறப்பெய்தல்;

(ஆ) கேட்டு விலகல்;

(இ) சித்த சுவாதீனமுற்றவராதல்;

(ஈ) குறித்த சில சட்டவிதிகளை மீறுதல்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**7**. (1) 306ஏ 2 சிங்க மாவட்ட உறுப்பினர்களின் மத்தியில் இருந்து கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கிணங்க தேர்வு செய்யப்பட்ட தவிசாளர், செயலாளர் மற்றும் பொருளாளர் உட்பட பதினேழு உறுப்பினர்களைக் கொண்டதோர் (இதனகத்துப் பின்னர் “நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்” என்றழைக்கப்படும்) நிறைவேற்று அதிகாரம் கொண்டதோர் குழுவின் மூலம் இச்சட்டத்தின் விதிகளுக்கும் 9 ஆம் இலக்க பிரிவினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்கள் முகாமை மற்றும் நிருவாகம் செய்யப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு நேர்முந்திய நாளன்று இருந்த நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆரம்ப நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, அதே நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பொதுக் குழுக் கூட்டம் இடம்பெறும் வரையிலும் பதவிதாங்குநர்களாகவுமிருத்தல் வேண்டும்.

(3) சிங்க வைத்தியசாலை நம்பிக்கைப் பொறுப்பின் முன்னோடியான திரு. அநில் நாணாயக்கார மற்றும் வைத்தியசாலையின் ஆரம்ப ஸ்தாபகருமான திரு. கே. ஜீ. விஜயசிறி ஆகியோர் நம்பிக்கைப் பொறுப்பின் ஆயுட்கால உறுப்பினர்களாக இருப்பதோடு அதற்கு மேலதிகமாக பதவிவழி மூலம் உறுப்பினர்கள் அறுவரும் மற்றும் சிங்க அமைப்பின் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து ஒன்பது பேரும் பொதுக் குழுக் கூட்டத்தினூடாக நியமிக்கப்படுவர். அவ்வாறு நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படும் ஒன்பது பேரினதும் பதவிக் காலம் மூன்றாண்டு காலமாகும்.

(4) வைத்தியசாலையின நிருவாகம் மற்றும் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்காக ஏழு உறுப்பினர்கள் கொண்ட முகாமைத்துவக் குழுவொன்றினை நியமித்துக்கொள்ள வேண்டுமென்பதோடு, அக்குழு நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கண்காணிப்பின்கீழ் இடம்பெற வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுத் தத்துவங்கள்

**8**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்பட்டக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல் புனரமைத்தல் மற்றும் வேறு வகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட

குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும்;

ஆயின், நம்பிகைப் பொறுப்பாளர்கள் சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்தலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை குழு தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத

அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக் கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக் கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்; அத்துடன்

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தேவைகளுக்காக இலங்கையினுள் ஊழியர்களை பயிற்றுவித்தல்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**9.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் அல்லது அவர்களை பதவி நீக்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்:

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்:

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனத்திற்காக நியதிகளும் அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்:

(ஈ) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினதும் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதன் கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல்:

(உ) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்:

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும், கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்*

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்படைப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தினது வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்*

**11.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்க வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ‘‘தகைமைபெற்ற கணக்காய்வாளர்’’ என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**12.** (1) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் குழுவானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து சமூகசேவைகள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பால் செலுத்த வேண்டிய வையும் மன்றத்திற்கு செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்

**13.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான நம்பிக்கைப் பொறுப்பின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நம்பிகைப் பொறுப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பானவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**14.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப் பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலாகுதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும், ஆதனத்தையும் பயன்படுத்துதல்

**15.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**16.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் அல்லது பொருளாளர் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான சபையின் அத்தகைய பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கலைக்கப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்

**17.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, பொதுக்கூட்டமொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்

**18.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.